IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS.No.72/2017 Date: 01.10.2024

PW1-ராஜேஸ்வரி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பாகபிரிவினை கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி என் அம்மா. அவர் இறந்துவிட்டார். 2ம் பிரதிவாதி எனக்கு தம்பி. என் தாத்தா பெயர் ராமசாமி. அவர் இறந்து சுமார் 20 வருடங்களுக்கு மேல் இருக்கும். அவருடைய இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா ராமசாமிக்கு 2 மகன்கள், 4 மகள்கள். மகன்கள் பெயர் சின்னுசாமி, பெருமாள், மகள்கள் பெயர் சின்னபிள்ளை, செல்லம்மாள், தாயம்மாள், காளியம்மாள். அவர்கள் அனைவரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். தாவா 1 முதல் 15 இன சொத்துக்கள் என் தாத்தாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெருமாள் வாரிசுகள் பெயர் ராஜம்மாள், செல்லம்மாள், ராஜமாணிக்கம், கணேசன். அவர்கள் அனைவரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். என் பெரியப்பா பெருமாளின் மகன் கணேசனுக்கு ஜெயபிரகாஷ், பூபதி, இந்திராணி ஆகியோர்கள் வாரிசுகள். ராஜமாணிக்கத்திற்கு ஜெயம்மாள், சிவக்குமார், மகேஸ்வரி, ராதா ஆகியோர்கள் வாரிசுகள். என் அத்தை செல்லம்மாளை தேவூரில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவருக்கு 5 மகன்கள், 1 மகள் உள்ளார்கள். 1 மகன் இறந்துவிட்டார். தாயம்மாளுக்கு 1 மகன், மகள் உள்ளார்கள். காளியம்மாள் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டார். செல்லம்மாள், தாயம்மாள் வாரிசுகளை தாவா தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கணேசன், ராஜமாணிக்கம் வாரிசுகளையும் தாவா தரப்பினராக சேர்க்கவில்லை. அவர்கள் அவசியமான தரப்பினர்கள் என்றாலும், அவர்களை கட்சி சேர்க்காத காரணத்தால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-ராஜேஸ்வரி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.